

# ஜோதிடர் விபரம்

ஜோதிடர் விபரம்
ஜோதிடர் விபரம்



## திருமணப்பொருத்தம்

ஜாதகி பெயர் : கஸ்தூரி
பிறந்த தேதி : 11/03/1968 07:58:53 AM
பிறந்த இடம் : Cuddalore
ராசி / நட்சத்திரம் :
நடப்பு தசா புத்தி :

ஜாதகர் பெயர் : ராஜமாணிக்கம்
பிறந்த தேதி : 18/05/1963 09:15:00 AM
பிறந்த இடம் : Pondicherry
ராசி / நட்சத்திரம் :
நடப்பு தசா புத்தி :

| | | | |
|---|---|---|---|
| லக் செவ் சனி ராகு | மா | | |
| சூரி சுக் | பெண் ராசி | | சந் |
| புத | | | குரு(வ) |
| | | | கேது |

| | | | |
|---|---|---|---|
| குரு | சுக் மா | சூரி புத(வ) | லக் |
| சந் | ஆண் ராசி | | செவ் ராகு |
| சனி கேது | | | |
| | | | |

## I. ஜாதகப் பொருத்தம்

1. லக்/லக் 4/10 மத்திமம்
2. ராசி/ராசி 8/6 அதமம்

| 3. தோஷம் : | பெண் | ஆண் | மதிப்பு |
|---|---|---|---|
| 1. சூரியனால் தோஷம் | இல்லை | இல்லை | கூடாது தோஷம் உண்டு |
| 2. செவ்வாய் தோஷம் | 0.25 உண்டு | 1.25 உண்டு | இணைக்ககூடாது |
| 3. ஏழாமிடத்தில் உள்ள தோஷம் | உண்டு | இல்லை | தோஷம் உண்டு கூடாது |
| 4. ஏழாம்அதிபதி தோஷம் | உண்டு | இல்லை | தோஷநிவர்த்தி இல்லை இணைக்க கூடாது |
| 5. சுக்கிரனால் தோஷம் | இல்லை | இல்லை | தோஷநிவர்த்தி உண்டு இணைக்கலாம் |
| 6. பாவகிரகசேர்க்கை தோஷம் | உண்டு | உண்டு | MARKFO6 |
| 7. பஞ்சணை தோஷம் | உண்டு | உண்டு | தோஷம் உண்டு இணைக்ககூடாது |
| 8. புத்திர தோஷம் | உண்டு | உண்டு | தோஷம் உண்டு இணைக்ககூடாது |

4. சிறப்பு:

| | | | | |
|---|---|---|---|---|
| 1. பெண் லக்கினாதிபதி | குரு | ஆண் ஜாதகத்தில் | 10-ல் ஆட்சி | உத்தமம் |
| 2. ஆண் லக்கினாதிபதி | புதன் | பெண் ஜாதகத்தில் | 11-ல் சமம் | உத்தமம் |
| 3. பெண்ணின் 7 மாதி | புதன் | ஆண் ஜாதகத்தில் | 12-ல் நட்பு | உத்தமம் |
| 4. ஆணின் 7 மாதி | குரு | பெண் ஜாதகத்தில் | 6-ல் நட்பு | அதமம் |
| 5. பெண்ணின் பாக்கியதிபதி | செவ்வாய் | ஆண் ஜாதகத்தில் | 2-ல் நீச்சம் | அதமம் |
| 6. ஆணின் பாக்கியதிபதி | சனி | பெண் ஜாதகத்தில் | 1-ல் சமம் | உத்தமம் |

தோஷம் நிவர்த்தி ஆகவில்லை தோஷசாமியம் இருக்கிறது

5. திசாபுத்தி:

பெண் திசா புத்தி நடப்பு: சுக் தசை குரு புத்தி - ராகு அந்தரம்
ஆண் திசா புத்தி நடப்பு: கேது தசை ராகு புத்தி - சனி அந்தரம்
தசா சந்திப்பு இல்லை ✓

6. கோச்சாரம்:

பெண் ஜாதகத்திர்க்கு கோச்சர சனி 4 உள்ளது அதமம்
பெண் ஜாதகத்திர்க்கு கோச்சர குரு 12 உள்ளது அதமம்
ஆண் ஜாதகத்திர்க்கு கோச்சர சனி 9 உள்ளது உத்தமம்
ஆண் ஜாதகத்திர்க்கு கோச்சர குரு 5 உள்ளது உத்தமம்

## II. நட்சத்திரப்பொருத்தம்

| பொருத்தம் | பொருத்த விளக்கம் | தன்மை | மதிப்பு |
|---|---|---|---|
| 1.தினம் | 18 பரம மைத்ரம் தாரை | ம | 1/2 |
| 2.கணம் | தேவகணம் மானுடகணம் | ம | 1/2 |
| 3.மகேந்திரம் | 18வது நட்சத்திரம் | அ | 0 |
| 4.ஸ்திரி தீர்க்கம் | 18வது நட்சத்திரம் | உ | 1 |
| 5.யோனி | கிடா ஆடு ஆண் சிங்கம் | ம | 1/2 |
| 6.ராசி | கடகம் கும்பம் (8)புத்திரலாபம் | அ | 0 |
| 7.ராசியதிபதி | சந்திரன் சனி | ம | 1/2 |
| 8.வசியம் | கடகம் கும்பம் | அ | 0 |
| 9.ரச்சு | தொடை வயிறு | உ | 1 |
| 10.வேதை | ஒன்றுக்கொன்று வேதையில்லை | உ | 1 |

நட்சத்திரப்பொருத்தம் மதிப்பெண்= 5
நட்சத்திரப்பொருத்தம் முடிவு சஷ்டாஷ்டக தோஷம் உண்டு. சிறப்பில்லை

திருமண விதிகள் மற்றும் பொருத்தங்களின் இறுதியான திருமண பொருத்த முடிவு

தோஷம் நிவர்த்தி ஆகவில்லை எனவே திருமண பொருத்தம் இல்லை இணைக்க கூடாது

## ஜோதிடர் முக்கிய குறிப்பு

முடிவு : % பலம் உண்டு

பொருத்தம் உண்டு, திருமணம் செய்யலாம், உத்தமம்.
பொருத்தம் உண்டு, திருமணம் செய்யலாம், மத்திமம்,பரிகாரம் தேவை.
பொருத்தம் இல்லை, திருமணம் செய்யகூடாது, அதமம்.

1. திருணமஞ்சேரி இது கும்பகோணம்- மயிலாடுதுறை மார்க்கத்தில் உள்ள குத்தாலத்திலிருந்து பிரிந்து 5கி.மீ செல்லவேண்டும். வளர்பிறை வெள்ளிக்கிழமை திருமணஞ்சேரி சென்று இங்குள்ள கோகிலாம்மாள் - திருக்கல்யாண சுந்தரர் சுவாமிக்கு மாலை சாற்றி வழிபட்டு, ஆலயத்திலிருந்து தரும் மாலையை திருமணம் நடக்கும் வரை பத்திரமாக வைத்திருந்து, திருமணம் நடந்தவுடன் தம்பதிகள் இருவரும் மீண்டும் இந்த கோவிலுக்கு வந்து அந்த மாலையை கோவிலில் கொடுத்து வழிபாடு செய்து பிரார்த்தனையை முடித்துக்கொள்ளவேண்டும். திருமணஞ்சேரியில் வழிபாடு முடிந்தவுடன் வேறு கோவிலுக்கு செல்லாமல் நேரடியாக தங்கள் வீட்டிற்கு வரவேண்டும்.

2.திருப்பைஞ்சீலி இது திருச்சி - முசிறி மார்க்கத்தில் 20கி.மீ தொலைவில் உள்ளது. திருமண தோஷம் உள்ளவர்கள் வளர்பிறை வெள்ளி, ஞாயிற்றுகிழமைகளில் இங்கு சென்று கல்வாழைக்குஆடை, அணிவித்து மஞ்சள் கயிற்றால் காப்பு கட்டி பரிகார பூஜை செய்யவேண்டும், செவ்வாய் தோஷத்திற்கு இது ஒரு நல்ல பரிகார °தலம்.

3. குரு பகவான் பரிகாரம் பட்டமங்களம் - இது திருப்பத்தூரிலிருந்து 5கி.மீ தொலைவில் உள்ளது. ப° போக்கு வரத்து உள்ளது. வளர்பிறை வியாழக்கிழமை ஆரம்பித்து தட்சினா மூர்த்திக்கு நெய்விளக்கு வைத்து, கொண்டக் கடலை மாலை போட்டு அர்ச்சனை செய்யவும். ஆலமரத்தை 27,54, அல்லது 108 முறை உங்கள் வேண்டுதலை மனதிற்குள் கூறி சுற்றவும். தொடர்ந்து 5,7 வாரம் செய்யவும் ( இது அட்டமாசித்தி தக்ஷிணா மூர்த்தி - சிறப்பான பலன் கிடைக்கும்) குருவித்துறை குரு பகவானையும் வணங்கலாம். ஆலங்குடி குரு பகவானையும் வணங்கலாம்.

4. மாங்கல்ய தோஷ பரிகாரம் திருமணம் நடக்காமல் தடை ஏற்படுவர்களும், கணவன் மனைவிக்குள் கருத்துவேறுபாடு உள்ளவர்களும், சரியான தாம்பத்ய வாழ்க்கை இல்லாதவர்களும் இந்த பரிகாரத்தைச் செய்யலாம். பரிகாரம் செய்யும் இடம் - ஸ்ரீ ரங்கம் சென்று ஸ்ரீ அரங்க நாதருக்கு எதிரில் அம்மாமண்டபம் அருகில் வெள்ளிக்கிழமை அதிகாலை 4. 30 - 5.30 மணிக்குள் பிரம்ம முகூர்த்தத்தில் செய்து விடவேண்டும். தேவையான பொருட்கள் பரிகார தாலி - 1 ( மஞ்சள் கயிற்றில் கட்டி வைக்கவும்) பச்சரிசி- 200கிராம் மிளகு - 10 கிராம் மல்லிகை பூ- 200 குங்குமம், மஞ்சள் , வெற்றிலை பாக்கு, சிறிய மஞ்சள் துண்டு, வளையல் 1 செட்டு, காணிக்கை 6 1/4 ரூபாய் ஒரு வாழை இலை. காவிரி ஆற்றின் ஓரத்தில் வாழை இலையை நுனியை வடக்கு நோக்கி போட்டு அந்த இலையில் மேலே கண்ட பொருட்களை எல்லாம் வைத்து கிழக்கு முகமாக நின்று பரிகாரத்தாலியை எடுத்து அதில் சந்தனம், குங்குமம் வைத்து இலையில் வைத்துவிட்டு, பின் சூடம் ஏற்றி உங்கள் குல தெய்வத்தையும் முன்னோர்களையும் நினைத்து வணங்கி மனதால் ஆசிபெற்றுக் கொண்டு , சுக்கிரனுடைய அரங்கநாதபெருமாளை மனமுருகி வணங்கி, என் ஜாதகத்தில் கிரக தோஷங்களால் ஏற்படும் எல்லாவித களத்திர தோஷமும் இன்று முதல் விலகிவிட வேண்டும். இனி மேல் எனக்கு நல்ல களத்திரம் ஏற்பட்டு நல்ல மணவாழ்க்கை , மாங்கல்ய பாக்கியம், மகப்பேறு அனைத்தும் பெற்று வளமுடன் வாழ என்னைஆசீர்வதிக்கவேண்டும் ” என்று வேண்டி தியானித்து, மஞ்சள் கயிற்றில் உள்ள தாலியில் சிறிது, பச்சரிசி, மிளகை போட்டு ஆசிர்வதித்து சிறிது மல்லிகை பூவை தாலியில் வைத்து, பெண்ணாக இருந்தால் கழுத்தில் கட்டிக் கொள்ளவும், ஆணாக இருந்தால் இடுப்பில் கட்டிக் கொள்ளவும். பிறகு இரண்டு கைகளையும் ஏந்தி

பரிகாரப் பொருட்களை வாழை இலையுடன் எடுத்துக் கொள்ளவும். துணைக்கு ஒரு வரைக்கூட்டிக் கொண்டு, அவரிடம் நீங்கள் உடுத்திக் கொள்ள புது வஸ்திரம் கொடுத்து, இருவரும் ஆற்றில் இறங்கி கிழக்கு முகமாக நின்று இறைவனை வேண்டி எனக்குள்ள களத்திர தோஷம் இன்றோடு நீங்கி விடவேண்டும் ' என்று 3 முறை கூறி தோஷப் பொருள்களை ஓடும் ஆற்று நீரில் விட்டுவிடவேண்டும் . நீங்கள் ஆற்றுநீரில் 3 முறை மூழ்கி எழுந்திருக்கவேண்டும், 3வது எழுந்தவுடன் பக்கத்தில் இருப்பவர் நீங்கள் கட்டியிருந்த தாலியையும், உடுத்தியிருந்த துணியையும் ஓடும்நீரில் அவிழ்த்து விட்டு விடவும். அவை நீரில் அடித்து செல்லப்படவேண்டும். உங்கள் உடம்பில் வேறு எந்த பழைய பொருட்களும் இருக்கக்கூடாது. இப்போது நீங்கள் புண்ணிய நதியிலிருந்து புதுப்பிறவி எடுக்கிறீர்கள் என்று அர்த்தம். அதன்பின் பக்கத்திலிருப்பவரிடம் இருக்கும் புதுத்துணியை வாங்கி உடுத்திக் கொண்டு கரை ஏறி, கரையில் ஒரு சூடத்தைக் கொளுத்தி தொட்டு கும்பிட்டுவிட்டு, நேரடியாக கோவிலுக்கு வந்து 6 முதல் 7 மணிக்குள் சுக்கிர ஹோரையில் ஒரு அர்ச்சனைத் தட்டு வாங்கி அதில் ஒரு மாதுளம் பழம் வாங்கி வைத்து அர்ச்சனை செய்து, ரெங்கநாதரையும், தாயாரையும், ஸ்ரீ ராமானுஜரையும் நெய் தீபம் ஏற்றி வழிபடவும், அர்ச்சனை செய்ய இயலவில்லையெனில் மாதுளம் பழத்தை சுவாமி காலடியில் வைத்து வணங்கி எடுத்துக் கொள்ளலாம். அதன் பின் வேறு கோவிலுக்குச் செல்லாமல் நேரடியாக உங்கள் வீட்டிற்கு வந்து வெள்ளி இரவு 8 முதல் 9 மணிக்கு சுக்கிர ஹோரையில் உங்கள் வீட்டு பூஜை அறையில் அந்த பழத்தை வைத்து வணங்கி, ஒரு சுமங்கலிப் பெண் ஒருவர் அந்த பழத்தை அறுத்து உங்களுக்கு ஊட்டி விடவேண்டும். அதை நீங்கள் ருசித்து சாப்பிட அந்த பழம் இனிப்பது போல் உங்கள் மணவாழ்க்கையும் இனிப்பாக இருக்கும். உங்களுக்கு பழம் ஊட்டிய சுமங்கலிப் பெண்ணிற்கு தாம்பூலம்,தட்சனை, துணிமணிகள் வைத்து, அவர்களுக்கு கொடுத்து அவர்கள் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கி பரிகாரத்தை நிறைவு செய்யவேண்டும். குறிப்பு - பரிகாரத்திற்கு புறப்படும் முன் உங்கள் குலதெய்வத்திற்கு காணிக்கை முடிந்து போட்டு விடவும். இது ஒரு சிறப்பான களத்திர தோஷ பரிகாரம் நல்ல தோஷ நிவர்த்தி ஏற்படும். தொழில் வழி ஜோதிடர்களுக்கு - வரும் வாடிக்கையாளர்களுக்கு பரிகார தாலியும், மாங்கல்ய கயிரையும் கொடுத்து தகுதிக்கு தக்கவாறு காணிக்கை பெற்றுக் கொள்ளலாம்.

5. வாழைப்பூ பூஜை பரிகாரம் நிறைந்த பௌர்ணமி நாளில் இந்த பரிகாரத்தைச் செய்யவேண்டும். தேவையான பொருட்கள் மஞ்சள் தூள் - 50 கிராம் மண் கலயம் - 1 பச்சரிசி - 1 கிலோ வாழைப்பூ- 1 நீளமான தென்னங்குச்சி - 27 5வித எண்ணெய் - 50 தேங்காய், பழம், பத்தி, சூடம்,கதம்பம், மல்லிகை பூ, வெள்ளைத் துணி கொஞ்சம். செய்முறை- பௌர்ணமி தினத்தன்று வீட்டை சுத்தம் செய்து ஒரு வாழை இலையை நுனி வடக்கு நோக்கி இருக்குமாறு போட்டு அதன் மேல் மண் கலசத்தை நூல் சுற்றி, பாதி அளவு தண்ணீர் நிரப்பி, இலையில் பச்சரிசியைப் பரப்பி அதன் மேல் வைக்கவேண்டும். வாழைப் பூவில் 3 இதழ்களை மட்டும் பிரித்து கூம்பு மேல் நோக்கி இருக்கும் படி கலசத்தின் மேல் வைக்கவேண்டும். சுமார் 2அடி நீளம் கொண்ட புழுங்காத தென்னங்குச்சிகளை தயார் செய்து 27 குச்சிகள் ஒடித்துவைத்துக் கொள்ளவேண்டும். 27 குச்சிகளும் வெள்ளைத் துணியால் ஒருபுறம் பந்தம் கட்டிக் கொள்ளவேண்டும். ஒரு பாத்திரத்தில் சம அளவில் 5 எண்ணெய்கள் (விளக்கெண்ணெய், இலுப்பை எண்ணெய், தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய், நெய் ) ஊற்றி கலந்து கொள்ளவேண்டும் . கலந்த எண்ணையில் தென்னங்குச்சியிலுள்ள 27 பந்தங்களையும் ஒவ்வொன்றாகத் தோய்த்து, வாழைப்பூவில் குத்தி வைக்கவேண்டும். இலையில் உள்ள

கலசத்திற்கு முன்னால் பழம், வெற்றிலை, பாக்கு, புஷ்பம் வைத்து ஊதுபத்தி கொளுத்தி வைக்கவும் . கலசத்திற்கு பூ சுற்றவேண்டும். மஞ்சள்தூளில் விநாயகர் பிடித்து வைத்து அதற்கு பொட்டு வைத்து புஷ்பம் வைத்து வாழைப்பழம் 2 வெத்திலை பாக்கு வைத்து குலதெய்வம். இஷ்ட தெய்வத்தை வணங்கி தேங்காய் உடைத்து தீபாராதனை காட்டவேண்டும். வாழைப் பூவில் உள்ள பந்தத்தை கொளுத்தி எரியவிடவேண்டும் . பந்தம் எரிந்து கொண்டிருக்கும் போது திருமண தோஷத்திற்குரிய ஆனோ, பெண்ணோ கலசத்தை வலப்புறமாக 3 சுற்றும் இடப்புறமாக 3 சுற்றும், சுற்றி வந்து கீழே விழுந்து வணங்கி பிரார்த்தனை செய்து கொண்டு கலசம் பார்த்து உட்காரவேண்டும். பந்தம் முழுவதுமாக எரிந்து முடிந்தவுடன், பிரார்த்தனையை முடித்துக்கொண்டு எல்லாப் பொருட்களையும் ஒரு கூடையில் வைத்து ஆறு, குளம் , ஏரி போன்ற நீர்நிலைகளில் விட்டு விட்டு, பிறகு குளித்துவிட்டு வீட்டிற்கு வரவேண்டும். இந்தபூஜை பௌர்ணமி ஏறு பொழுதில் செய்யவேண்டும். இந்த வாழைப் பூ பூஜையைச் செய்தால் எவ்வளவு கடுமையான தோஷமும் நீங்கி இறைவன் அருளால் திருமணம் சுகமாக நடக்கும் என்பது உறுதி. இந்த பரிகாரத்தையும் தொழில் முறை ஜோதிடர்கள் முன்னின்று பக்குவமாக செய்து முடித்து தகுதிக் கேற்ப தட்சனை பெற்றுக் கொள்ளலாம். வாழை மரத்திற்கு தாலி கட்டி, பின் அந்த வாழை மரத்தை வெட்டிவிட்டு, அந்த வாழை மரத்திற்கு சடங்குகள் செய்து தோஷம் கழிக்கும்முறையும் உள்ளது. ஒருசிறு பையனை வைத்து தோஷம் உள்ள பெண்ணிற்கு தாலிகட்ட வைத்து, பின் அந்த தாலியை அறுத்து, அதற்கு சடங்கு பரிகாரங்கள் செய்யும் முறையும் உண்டு. இந்த பரிகாரங்கள் எல்லாம் பிரச்சினைக்குறியவை, சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி' என்று ஒரு பழமொழி சொல்லுவார்களே அதைபோல் செவ்வாய் தோஷம் உள்ளது என்பதை ஊர் மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டி விடும். அதன் பின் அந்த பெண்ணுக்கோ, ஆணுக்கோ செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் என்ற வசவு இருந்து கொண்டேயிருக்கும். செவ்வாய் தோஷம் உள்ள பெண்ணை போலியாக ஒரு ஓலை குடிசை கட்டி, அதில் ஒரு புறம் மட்டும் வாசல் வைத்து அதையும் ஓலையால் மறைத்து விட்டு, தோஷமுள்ள பெண்ணை அந்தக் குடிசைக்குள்அடைத்து, குடிசையின் ஒருபுறத்தில் தீயை வைத்து கொளுத்தவேண்டும். குடிசை ஓரளவு எரிந்தவுடன் குடிசைக்குள் உள்ள தோஷமுள்ள பெண் வாசல்படியில் உள்ள அடைப்பைநீக்கி விட்டு , குடிசையை விட்டு வெளியேறி , திரும்பிப் பார்க்காமல் அப்படியே போய் குளித்துவிட்டு வீட்டுக்கு வந்து பூஜை அறையில் விளக்கேற்றி முருகனை வழிபடவேண்டும், இந்த பரிகாரம் செவ்வாய்கிழமை மட்டும்தான் செய்யவேண்டும்.

6. பிரிந்த கணவன் - மனைவிகள் ஒன்று சேர, திருமருகல் திருமணமான தம்பதிகள் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்திருந்தால் திருமருகல் சென்று வழிபட்டால் சேர்ந்து வாழலாம். இது கும்பகோணத்திலிருந்து நாகப்பட்டினம் செல்லும் வழியில் உள்ளது. ஸ்ரீ ரங்கம் - ஸ்ரீ ரங்கம் சென்று வெள்ளிக்கிழமை ரெங்கநாதரையும், தாயாரையும்,ஸ்ரீ மத் ராமானுஜரையும் நெய்தீபம் ஏற்றி வழிபட்டால் தோஷம் நிவர்த்தியாகும். சேர்ந்து வாழலாம். 7. தாலியை கழற்றி வைப்பது திருமணத்திற்குப் பின் கிரக சூழ்நிலைகளால் கணவன் மனைவி பிரிவு, சண்டை, சச்சரவுகள் ஏற்படும் போது.

1. தாலியை கழற்றி சாமி உண்டியலில் போடலாம். இது ஒரு நல்ல பரிகாரம் . என்றாலும் இன்று தங்கம் விற்கும் விலையில் இதை எல்லோரும் செய்யமுடியாது. வசதி உள்ளவர்களுக்கே பொருந்தும்.

2. தாலியைக் கழற்றிவீட்டில் சாமிபடத்திற்கு முன்னால் வைத்துவிட்டு, வெறும் தாலிக்கயிரை மட்டும் போட்டுக் கொள்ளலாம். கிரக காலம் முடிந்த பின் ஒரு முகூர்த்த நாளாகப் பார்த்து, தாராபலம், சந்திர பலம், பார்த்து உங்களுக்கு விருப்பமான இஷ்ட தெய்வத்திற்கு வழிபாடு செய்து, குல தெய்வத்தை வேண்டி, மீண்டும் தாலியைக் கட்டிக் கொள்ளலாம். சில சமயம் தாலி தோஷம் இயற்கை நிகழ்ச்சிகளால் கழிந்துவிடும்.

உண்மை நிகழ்ச்சிகள்

1. ஒரு திருமணத்தில் தாலி கட்டும் போது மணமகள் தாலியை மாற்றி பின்னலாக கட்டிவிட்டார். தாலி மாலைக்குள் சிக்கிக் கொண்டது. உடனே அவர் போட்ட 3 முடிச்சுகளையும் மணமேடையிலேயே மணமகனின் சகோதரி அவிழ்த்துவிட்டு தாலியை ஒழுங்கு படுத்தி அவர் கட்டினார். ஆக மணமகன் கட்டிய தாலி அவிழ்க்கப்பட்டதால் தோஷம் கழிந்து விட்டது. இப்போது நாத்தனார் கட்டிய தாலியுடன் நன்றாக வாழ்கிறார்கள் இதுபோல் இன்றும் தோஷமுள்ள தம்பதியர்களுக்கு நாத்தனார் தாலிகட்டினால் தோஷம் நிவர்த்தியாகிவிடும். ஆனால் அந்த நாத்தனாரும் தோஷம் இல்லாதவராக இருக்கவேண்டும்.

2. ஒரு ஆணிண் திருமணத்திற்கு அவன் சகோதரிகள் தாலி வாங்கி வருவது சில பகுதிகளில் இன்னும் வழக்கத்தில் உள்ளது., எங்கள் ஊரில் எனக்கு தெரிந்த தோஷம் உள்ள மாப்பிளைக்கு திருமணத்திற்கு அவனின் 2 வது சகோதரி தாலி வாங்கி விட்டாள். ஆனால் முறைப்படி முதல் சகோதரி தான் வாங்கவேண்டுமாம். எனவே மூத்த சகோதரியின் கணவன் நாங்கள் தான் தாலி வாங்கி வருவோம் என்று பிடிவாதம் பிடித்து விட்டார். எவ்வளவோ சமாதானப்படுத்தியும் கேட்கவில்லை, வேறுவழியில்லாமல் அவர் திருமணத்திற்காக முதலில் வாங்கிய தாலியை கடைகாரரிடமே விளக்கம் சொல்லி கொஞ்ச தொகை தள்ளுபடி செய்து கொடுத்துவிட்டார்கள்.

2 வது முறை வாங்கிய தாலி தான் கட்டப்பட்டது. இது இயற்கையான நிகழ்வு என்றாலும் தோஷம் கழிந்துவிட்டது. இன்று நல்லபடியாக வாழ்கிறார்கள்.

3. ஒரு குடும்பத்தில் கணவன், மனைவிக்குள் அடிக்கடி சண்டை அடி தடி வந்து கொண்டேயிருந்தது. ஒரு நாள் கணவ்ன் கோபத்தில் அடிக்கும் போது தாலி ஒடிந்து விட்டது. அதன் பின் ஒடிந்த தாலியை உடனே மாற்ற வசதியில்லாததால் 2 வருடம் வரை அந்தப் பெண் தாலியில்லாமல் வாழ்ந்தாள். கிரக காலம் முடிந்தது. மீண்டும் அந்த ஒடிந்த தாலியை கடையில் விற்றுவிட்டு புதுத்தாலி வாங்கி கட்டி கொண்டார்கள். இப்போது அதிக அளவில் சண்டை சச்சரவு இல்லை. குறிப்பாக கணவன் அடிப்பது குறைந்து விட்டது தாலி மாறியது சங்கடமும் மாறியது.

4. ஒரு குடும்பத்தில் கணவன் - மனைவி சண்டை ஏற்பட்டு மனைவி தாய் வீட்டுக்குப்போய்விட்டாள். கொஞ்சகாலம் தனியாக வாழ்ந்தார்கள். ஆனால் பேசிக் கொள்வார்கள் ஒரு நாள் மனைவி தனியாகப்படுத்திருக்கும் போது எதேச்சையாக தாலி கழன்று படுக்கையில் தனியாக விழுந்துவிட்டது. காலையில் இதை பார்த்து பதறியோசித்து மீண்டும் கட்டிக் கொள்ளாமல் வீட்டில் பத்திரமாக வைத்துவிட்டாள், ஒரு நாள் இவன் கணவன் இவளை பார்த்த போது, தாலி எங்கே என்று

கேட்டான், அவளும் விபரம் கூறவே சரி என்று ஒத்துக் கொண்டான். அதன்பின் அவர்கள் கோபமும் கொஞ்சம் தனிந்தது. கணவனும் மனைவி வீட்டுக்கு அடிக்கடிபோய்வந்தான். இந்நிலையில் மனைவி யாருடைய பேச்சையோ கேட்டு தாலியை மீண்டும் கழுத்தில் மாட்டிக் கொண்டாள்.மீண்டும் மனைவியைப் பார்த்தபோது, கணவன், உன் கழுத்தில் இப்போது தாலி இருக்கிறதே, இந்த தாலி நான்தானே கட்டவேண்டும். ஆனால் நான் கட்டவில்லையே, பின் எவன் இந்த தாலியை கட்டியது என்று அசிங்கமாகப்பேசி சண்டை வலுத்து கடைசியாக டைவர்º ஆகி நிரந்தரமாகப் பிரிந்து விட்டார்கள். இப்படி இயற்கை நிகழ்ச்சிகளை எல்லாம் பார்க்கும் போது தாலிக்கும் - கணவன் மனைவி உறவுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. எனவே திருமணத்தின் போது தாலி வாங்குவதற்கும், தாலி கட்டுவதற்கும், அவரவர் ஜாதகங்களைக் கொண்டு தாராபலம், சந்திரபலம் பார்த்து, நல்லமுகூர்த்த வேளை பார்த்தும் செய்யவேண்டாமா? பஞ்சாங்கத்தில் போட்டிருக்கும் பொதுவான முகூர்த்த நாளை எடுத்துக் கொள்வது, கல்யாண மண்டபம் காலியாக இருக்கும் நாளை முகூர்த்த நாளாக எடுப்பது, லீவு நாளை முகூர்த்த நாளாக எடுப்பது இப்படியெல்லாம் செய்யும் போது சங்கடங்களும் ஓட்டிக் கொண்டுத்தானே வரச்செய்யும். எனவே திருமண முயற்சியில் ஈடுபடுபவர்கள் ஒரு நல்ல ஜோதிடரை அணுகி அவருக்கு தகுந்த தாம்பூலம் தட்சனை கொடுத்து அவர் கூறும் நாளை தேர்ந்தெடுங்கள். நீங்களாக ஒரு நாளை கேட்டு வற்புறுத்தாதீர்கள்.

8.திருச்செந்தூர் முருகன் கோவில் பரிகாரம் செவ்வாய் தோஷத்தால் திருமணம் நடக்காமல் காலம் கடந்து செல்பவர்கள். திருச்செந்தூர் முருகன் கோவில் சென்று, அங்கு கடலில் நீராடி, முருகனுக்கு சுப அர்ச்சனை செய்து முருகன் காலடியில் 1 ரூபாய் நாணயத்தை வைத்து எடுத்து அதை ஒரு மஞ்சள் துணியில் முடிந்து முருகனிடம் எனக்கு திருமணம் விரைவில் நடந்தேறவேண்டும். அதற்கு உன் ஆசி வேண்டி இந்த ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்துச் செல்கிறேன். திருமணம் முடிந்த பின் ஒன்றுக்கு பத்தாக காணிக்கை செலுத்தி அர்ச்சனை செய்கிறேன்' என்று வேண்டி வீட்டுக்கு எடுத்து வந்து விடவும். அந்த நாணயத்தை பூஜை அறையில் வைத்து வழிபாடு செய்யவும். விரைவில் திருமணம் கூடி வரும். திருமணம் முடிவான பின் திருமணத்திற்கு சாமான் வாங்கும் போது இந்த 1 ரூபாய் காணிக்கையை எடுத்து முருகனை வணங்கி மஞ்சள் வாங்கவும் . திருமணத்திற்கு பண நெருக்கடியில் இருப்பவர்களும் இதை செய்யலாம். திருப்பரங்குன்றம் முருகன் கோவிலிலும் இதே பரிகாரத்தைச் செய்யலாம்.

9. ஹோம பரிகாரங்கள் திருமணத் தடை உள்ளவர்கள் தகுந்த வேத விற்பனர்களைக் கொண்டு , உங்களுக்கு தாராபலம் உள்ள நாளில் கீழ்கண்ட ஹோமங்களைச்செய்யலாம்பெண்ணாகஇருந்தால் பார்வதிசுயவரஹோமஆணாகஇருந்தால் ஸ்ரீகாந்தர்வ ராஜ ஹோமம் இந்த ஹோமங்களை முறைப்படி செய்தால் நல்ல பலன் கிடைக்கும். குடும்பத்தில் தடை நீங்கி மகிழ்ச்சி ஏற்படுவதோடு விரைவில் திருமணமும் கூடிவரும்.